பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 23 திங்கட்கிழமை 05.04.2021 கதிர் 19

## ஆயருக்குக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் அஞ்சலி

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், சபையில் அஞ்சலி செலுத்தினார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் 2

# பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் ஆயரின் திருவுடல் இன்று அடக்கம்

## மன்னாரில் முழு துக்க தினம் அனுஷ்டிப்பு



தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியில் அயராது குரல் கொடுத்த மாபெரும் சாட்சியம் மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடல் பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இன்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த ஆயரின் திருவுடலுக்கு வடக்கு கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்தும் பொதுமக்கள், அரச அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் எனப் பலர் அணிதிரண்டு அஞ்சலி செலுத்தினர். 2

ரஞ்சன் ராமநாயக்கவின்

## எம்.பி. ஆசனம் மனு நிராகரிப்பு



தனது நாடாளுமன்ற ஆசனம் இல்லாமல் செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் 2

## மிருசுவில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை மக்களின் கடும் எதிர்ப்பால் இடைநிறுத்தம்



தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை அரச படைகளின் தேவைகளுக்காகக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் நிலையில் இன்று மிருசுவில் பகுதியில் மேற்கொள்ளப்பட இருந்த நில அளவை நடவடிக்கைகள் பொதுமக்கள், சிவில் அமைப்பினர் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோரின் பலத்த எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டது. 2

## போராடி பெறுவதே எங்களின் வரலாறு

மனோ எம்.பி. தெரிவிப்பு



தனித் தமிழ்ப் பிரிவு என்றால், கொடுப்பதை வாங்கிக் கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான், வித்தியாசம். எழுதி வைத்துக் 2

## நாடு கடத்தப்பட்டவர்களிடம் சி.ஐ.டி., ரி.ஐ.டி. விசாரணை



சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜேர்மனியிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 24 பேரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.), பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு (ரி.ஐ.டி.) என்பன விசாரணைகளை நடத்தும். அதன் பின்னரே அவர்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்.

- இவ்வாறு பொதுமக்கள் 2

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஒருவருக்கேனும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை

விரைவில் சட்ட நடவடிக்கை வேண்டும் என்று சஜித் அணி வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஈராண்டுகள் நெருங்கினாலும்கூட தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் நீதிமன்றத்தில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2



## யாழில் களவாடப்பட்ட 50 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் சிக்கின

சந்தேகத்தில் இருவர் மாட்டினர்



கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் களவாடப்பட்ட சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பல உபகரணங்கள் கைப் பற்றப்பட்டுள்ளன என்று யாழ். பொலிஸார் 2

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
சமையல் உதவியாளர்கள்.
சுத்திகரிப்பு செய்பவர்கள்.
ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

## கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு வடக்கு, கிழக்கில் ஆயருக்கு அஞ்சலி

தமிழ்த் தேசிய துக்க தினமும் அனுஷ்டிப்பு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு வடக்கு, கிழக்கில் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் களவாடப்பட்ட 50 லட்சம் ரூபா ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளனர்.

குறித்த களவு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நாளை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நிறுவனம், கடை, தேவாலயம் மற்றும் வீடு உள்ளடங்கலாக 7 இடங்களில் களவாடப்பட்ட உபகரணங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவின் வழிகாட்டலில், யாழ். பொலிஸ் நிலையக் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி சி.ஐ.நெவில்பியந்த தலைமையிலான குழுவினரே களவாடப்பட்ட உபகரணங்களை மீட்டு சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

## கறுப்புக் கொடிகள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளிட்ட வடக்கு - கிழக்கு தமிழ் சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் இதன்போது ஆயரின் உருவப்படத்துக்கு மலர்தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் ஆயருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடக்கு, கிழக்கில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு தமிழ்த் தேசிய துக்க தினமும் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை, எமது இனத்துக்காகவும், நீதிக்காவும் போராடிய உன்னதமான மனிதரான ஆயரின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும் என்று காணாமல் போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

## மிருசுவில் காணி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள ஜே.45 மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றப் பகுதியில், தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள தனியாருக்குச் சொந்தமான 40 முதல் 50 ஏக்கர் வரையுள்ள காணியை அந்த இராணுவ முகாமின் பயன்பாட்டுக்குக் கையகப்படுத்த இன்று நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தன.

குறித்த விடயத்தை அறிந்த காணி உரிமையாளர், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் போன்றோர் இன்று காலை குறித்த பகுதியை முற்றுகையிட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் காணி அளவீடு செய்வதற்காக வந்திருந்த மாவட்ட நில அளவைத்திணைக்களப் பணிப்பாளர், பிரதேச செயலர் ஆகியோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர், காணி அளவிடுவது இடைநிறுத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டது.

எனினும், சிறிது நேரத்தின் பின்னர், நில அளவைத் திணைக்களப் பணிப்பாளர் இராணுவ முகாமுக்குள் சென்றமையால் கூடியிருந்த மக்கள் ஒன்று திரண்டு பலத்த எதிர்ப்பை வெளியிட்டதுடன், தங்களை ஏமாற்றிவிட்டு காணி அளவீடு செய்ய முயல்கின்றனர் எனவும், உள்ளே சென்றவர்கள் எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் கூறி ஏ - 9 பிரதான வீதியை மறித்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 20 நிமிடங்களுக்கு மேலாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தால் அரச மற்றும் தனியார் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதுடன் போக்குவரத்து நெரிசலும் உருவாகியிருந்தது.

இதன் பின்னர் வெளியே வந்த நில அளவைத் திணைக்களத்தினர் மக்களின் எதிர்ப்பையடுத்து குறித்த இடத்தில் இருந்து வெளியேறியதன் பிற்பாடே மக்கள் போராட்டத்தைக் கைவிட்டிருந்ததுடன், அளவை நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

வேலணை, காரைநகர் உட்படப் பல பகுதிகளில் தொடர்ந்தும் மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளால் அவை கைவிட்ட நிலையிலே இன்று இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்ந்தால் நில அளவைத் திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் இன்று போராட்டம் நடத்தியோர் தெரிவித்துள்ளனர்.

இன்று அளவீடு மேற்கொள்ளப்படவிருந்த காணியானது போர் முடிவுற்ற பின்னர் 2011ஆம் ஆண்டளவிலேயே இராணுவத்தினர் 52ஆவது படைப் பிரிவின் முகாம் அமைக்கக் கையகப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடு கடத்தப்பட்டவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஊடகங்களிடம் தெரிவித்தார்.

குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தை மீறி 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜேர்மனில் சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஜேர்மனிலிருந்து 20 பேரும், சுவிட்ஸர்லாந்தில் இருந்து 4 பேரும் சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் இராணுவத்தின் கண்காணிப்பில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமெரிக்காவில்கூட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் இலங்கை நீதிமன்றத்தில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. அத்துடன், தாக்குதல் சம்பவத்தின் பின்னணி மற்றும் பிரதான சூத்திரதாரிகளும் கண்டறியப்படவில்லை. அதனை நோக்கி விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரியவில்லை. கட்டாயம் தாக்குதலின் பின்புலம், பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும். அப்போதுதான் நீதி கிடைக்கும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை தடுத்து நிறுத்தத் தவறியவர்கள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

## போராடி பெறுவதே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு பறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவரின் முகநூல் பதிவு வருமாறு:-

மத்திய மாகாணத்தில் ஆரம்பித்து, இப்போது ஊவா மாகாணம் வரை, மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு என்ற இயந்திரம் ஒழிக்கப்பட்டு, தமிழ்ப் பிரிவு ஆகிவிட்டது.

6 தமிழர் பெரும்பான்மை பிரதேச சபைகளை நுவரெலியாவில் போராடிப் பெற்றதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வரலாறு. இருப்பதையும் இழப்பது இப்போதைய வரலாறு.

தனியான தமிழ்க் கல்வி அமைச்சு என்றால் மாகாண சபை வரவு - செலவுத் திட்டத்தில், எங்கள் பாடசாலை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகத் தனியான நிதி ஒதுக்கீடு கிடைக்கும்.

தனித் தமிழ்ப் பிரிவு என்றால், கொடுப்பதை வாங்கிக்கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான், வித்தியாசம். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம் - என்றுள்ளது.

## எம்.பி. ஆசனம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எழுத்தாணை ஒன்றைப் பிறப்பிக்குமாறு ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று நிராகரித்துள்ளது.

மேன்முறையீட்டுநீதிமன்றதலைமை நீதியரசர் அர்ஜுன் ஒபேசேகர மற்றும் மாயதுன்னே கொரயா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாமினால் அந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் எவ்வித சட்ட அடிப்படையும் இல்லை எனவும், இதனால் மனு நிராகரிக்கப்படுகின்றது எனவும் தீர்ப்பை அறிவித்த தலைமை நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர தெரிவித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், கடந்த ஜனவரி 12ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயர்நீதிமன்றத்தால் 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, குறித்த சிறைத் தண்டனைக்கு அமைய, ரஞ்சன் ராமநாயக்க அவரது எம்.பி. பதவியை இழந்துள்ளார் என்று சட்டமா அதிபர், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து, மூன்று மாதங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் தொடர்ச்சியாகக் கலந்துகொள்ள முடியாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனம் இல்லாமல் செய்யப்படும் என்பதற்கு அமைய, எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி ரஞ்சன் ராமநாயக்கவின் 3 மாத காலம் நிறைவடையவுள்ளது.

அதற்கு முன்னர் அவரது எம்.பி. பதவியைப் பறிப்பதை இடைநிறுத்தி உத்தரவிடுமாறு, அவரது சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இதன்படி, கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, ரஞ்சன் ராமநாயக்கவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு உட்படுத்துவதற்கான அறிவித்தலை வெளியிடுவதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று வரை ஒத்திவைத்திருந்தது.

இந்தநிலையில், குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காகவே ரஞ்சன் ராமநாயக்கவுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதே தவிர குற்றச் செயல்கள் தொடர்பில் அல்ல எனவும், அதனால் அவருடைய நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்து செய்யப்படுவது சட்ட அடிப்படையற்றது எனவும் ரஞ்சன் ராமநாயக்க சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும், சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டு கருத்து வெளியிடும்போது ரஞ்சன் ராமநாயக்க கோரியுள்ள நிவாரணத்தை வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

அதனால் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடி செய்யுமாறு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதன்படி, சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணையின்றி நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

## ஆயருக்குக் கூட்டமைப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது, மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தொடர்பாக சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. உரையாற்றினார்.

இதன்போது, ஆயரின் இறுதிக் கிரியை இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது எனக் குறிப்பிட்ட சார்ள்ஸ் எம்.பி., ஆயருக்கு தமிழ் மக்கள் சார்பாக தனது அஞ்சலியையும், வணக்கத்தையும் கூறிக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை போர்க்காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட ஆபத்துக்களை முன்நின்று தகர்த்து, மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சாட்சியாக உலக நாடுகளில் தன்னைப் பதிவு செய்தவர் என்றும், அவரின் இழப்பு தமிழ் மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் ஈடுசெய்யப்பட முடியாத இழப்பாகும் என்றும் சார்ள்ஸ் எம்.பி. மேலும் கூறினார்.

## ஆயிரக்கணக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்பின்னர் மன்னார் மறைமாவட்ட ஆயர் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ தலைமையில் இலங்கையில் உள்ள மறைமாவட்ட ஆயர்களின் கூட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட ஆயர்கள் கலந்துகொண்டனர்.

இரங்கல் திருப்பலியின் பின்னர் ஆண்டகையின் திருவுடலானது ஆலயத்திலேயே பல்லாயிரக்கணக்கானோரின் கண்ணீருடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை, மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு மரியாதை செலுத்தும் விதமாக மன்னார் மாவட்டத்தில் இன்று பூரண கடையடைப்புடன் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதற்காக வீதிகள், வீடுகள் எங்கும் கறுப்பு மற்றும் வெள்ளை நிறக் கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் மன்னார் மாவட்டம் சோக மயமாகக் காணப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. தனியார் போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவில்லை.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
**தொடர்புகளுக்கு 021 492 7778**

**இஞ்சி கன்று விற்பனைக்கு**
தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு 021 492 7778**

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நடந்தது இனவழிப்பு இல்லையா?

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரம் இனவழிப்பா? இல்லையா? – என்ற சர்ச்சை ஒன்று புதிதாகக் கிளப்பப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே அல்ல என்று தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார் என்ற மாதிரியும் –

அதற்காக அவரைத் துவம்சம் செய்ய வேண்டும் என்பது போலவும் – இப்போது தீவிரமாகக் குரல்கள் எழுந்துள்ளன.

ஊரோடு சேர்ந்து ஓடாமல் தனித்துக் குரல் கொடுக்கும் தனது பண்பியல்பு காரணமாக அடிக்கடி வாங்கிக் கட்டுகின்றார் சுமந்திரன். அந்த வரிசையில் இதுவும் ஒன்று.

*“அரசாங்கத்துக்கு நொந்துவிடும் என்பதற்காக இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறாதீர்கள்!”* – என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் கூறியிருக்கின்றார்.

அத்துடன், தாங்கள் விசாரணை நடத்தி, இனவழிப்பு நடைபெற்றதற்கான ஆதாரங்களை, தகவல்களை திரட்டி, எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நிரூபித்துக் காட்டவுள்ளனர் எனவும் அவர் கூறியிருக்கின்றார்.

பல சமயங்களில் அரசியல்வாதிகள், பிறரின் கூற்றுகளைத் தமக்கு ஏற்றவாறு அர்த்தப்படுத்தி, அதனடிப்படையில் விமர்சித்து வாங்கித் தள்ளுவார்கள். அந்த வரிசையில்தான் சிவாஜிலிங்கத்தின் கருத்தும் அரங்கேறியிருக்கின்றது.

இலங்கையில் இன வன்முறையை நேரடியாக அனுபவித்தவர்கள் நாம். அது இனப்படுகொலையாக (Genocide) அரங்கேறியதா அல்லது இனசுத்திகரிப்பாக (Ethnic Cleansing ) என்பது நமக்குத்தான் தெரியும். அதை நாம் உலகின் முன் நிரூபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதைத்தான் சுமந்திரன் சுட்டிக்காட்டுகின்றார்.

அரங்கேறிய இனக் கொடூரத்தை தமிழில் என்ன வார்த்தையில் அழைப்பது என்பதிலேயே எமக்குள் குழப்பம் உண்டு. Genocide என்பதை ‘இனப்படுகொலை” என்பதை விட ‘இனவழிப்பு’ என்று தமிழில் சுட்டுவதுதான் பொருத்தமானதாக இருக்கக் கூடும்.

தமிழருக்கு எதிராக இலங்கையில் அரச ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டவை ‘இனவழிப்பு’ என்பதை சர்வதேச சட்டங்கள், முறைமைகளுக்கு அமைவாக நாம் நிரூபிக்க வேண்டும்.

ஆனால், இந்த முயற்சி புதியதல்ல. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இது தொடர்பாக பல்வேறு பகீரதப் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பல்லாயிரம் பக்க அறிக்கைகள் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் இடம்பெற்றது இனவழிப்புதான் என்று குறிப்பிட்ட சர்வதேசப் பிரமுகர்களின் பட்டியல்களே வெளியிடப்பட்டுள்ளன.

‘இனவழிப்பு’ என்ற சொல்லுக்கான சர்வதேச சட்ட வரைவிலக்கணத்துக்கு அமைய அந்தக் கொடூரத்துக்கு அடிப்படையாக அமையும் ஐந்து விடயங்களை வரிசைப்படுத்தி, அவை இலங்கை விவகாரத்தில் எப்படிப் பொருந்துகின்றன என்பதை விவரிக்கும் விடயங்கள் ‘அமெரிக்கன் யுனிவர்சிற்றி வொஷிங்டன் கொலிஜ் ஒவ் லோ’ ஆய்வு அறிக்கையே விவரமாக உள்ளன.

ஆனாலும் கூட இலங்கையில் இடம்பெற்றது இனவழிப்பே என்பதை உலகம் இன்னும் ஏற்று அங்கீகரிக்கவில்லை.

உலகில் எங்கெங்கு இடம்பெற்றவை இனவழிப்பு என்று சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளதோ, அந்தந்த இடங்களில் இடம்பெற்றவற்றை இலங்கை விவகாரத்துடன் ஒப்பிட்டு, அங்கு நடைபெற்றவற்றை விடக் குறைவாக இலங்கையில் நடந்துவிடவில்லை என்பதைக் குறிக்கும் ஆய்வறிக்கைகளும் தாராளமாகவே உள்ளன.

ஆனாலும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2015 இல் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பேச்சாளர் வெளியிட்ட கருத்தில் –

*“இலங்கை தொடர்பாக நாம் நடத்திய விரிவான விசாரணைகளில் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பெரும்பாலும் இரு தரப்பினராலும் இழைக்கப்பட்டன என்பதற்கான வலுவான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் இனவழிப்புக் குற்றத்திற்கான கூறுகளை நிலைநிறுத்துவதற்கு போதுமான ஆதாரங்களை சேகரிக்க முடியவில்லை. எதிர்கால விசாரணைகளில் அவை அறியப்படுமானால் அது குறித்து யோசிக்கலாம்.”* என்ற சாரப்படக் குறிப்பிட்டிருந்தார்.

இதையே சுமந்திரன் இப்போதும் பிரஸ்தாபித்துள்ளார்.

இலங்கையில் நடந்தது இனவழிப்பே என்பதை சர்வதேச சட்ட வியாக்கியானங்களுக்கு அமைய நாம் நிரூபிக்க வேண்டும். இன்றைய சர்வதேச அரசியல் சூழல் அதற்கு சாதகமாகக் கனிந்து வந்திருக்கின்றது.

அதைப் பயன்படுத்தி அதனை நிரூபிக்க நாம் முயல வேண்டும். அந்த முயற்சியில் கஜேந்திரகுமார், நீதியரசர் விக்னேஸ்வரன், சுமந்திரன், சிவாஜிலிங்கம் எல்லோரும் ஒன்றுபட்டு காரிய மாற்ற வேண்டும். அதற்கான முன்முயற்சிதான் இப்போது தேவை

# கட்டுநாயக்க விமான நிலைய கழிப்பறையில் தங்கம் மீட்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெருந்தொகை தங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விமான நிலைய கழிப்பறையில் கைவிடப்பட்டுள்ள நிலையில் இந்த தங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கழிப்பறையில் காணப்பட்ட 3 பார்சல்களை சோதனையிட்ட போது அதில் பெருந்தொகை தங்கம் இருந்துள்ளது. மீட்கப்பட்ட தங்கம் ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியானதென மதிப்பிடப்பட்டுள்ளது.

உரிமையாளரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குற்றவியல் சட்டத்தின் கீழ் மைத்திரி உள்ளிட்டோருக்கு நடவடிக்கை எடுக்குக

## அஜித் பி பெரேரா வலியுறுத்தல்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஏனைய நபர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிறுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

நாட்டு மக்களை கொலை செய்து, பாதுகாப்பை சீர்குலைத்து அரசியல் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முற்பட்டவர்களே இதனை செய்துள்ளனர் என்பது தற்போது தெளிவாகியுள்ளது. அவ்வாறான நபர்கள் யார் என்பது தொடர்பில் ஆராய்ந்து, நியாயம் வழங்கப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப அதில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஏனைய நபர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் அதற்கான நடவடிக்கை இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரையில் முன்னாள் பிரதமரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. அத்தோடு நல்லாட்சி அரசாங்கத்தில் பாதுகாப்பு தொடர்பான எந்தவோர் அதிகாரமும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் காணப்படவில்லை. சகல அதிகாரங்களும் பதவிகளும் முன்னாள் ஜனாதிபதியிடமே காணப்பட்டன. எனவே ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்புக் கூறும் நிலை ஏற்படாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய எந்தவொரு பிரதிவாதிகளுக்கு எதிராகவும் இதுவரையில் இலங்கையில் வழக்குத் தொடரப்படவில்லை. எனினும் அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என்பதும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆணைக்குழுவினாலும் அது முடியாமல் போயுள்ளது.– என்றார்.

# மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் பலி; இருவர் காயம்!

## தலவாக்கலையில் நேற்று சம்பவம்





தலவாக்கலை, அக்கரப்பத்தனை பிரதேசத்தின் வோல்புறுக் பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கட்டட நிர்மாண வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீதே, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில், அக்கரப்பத்தனை பிரதேசத்தின் பெல்மோரல் தோட்டத்தைச் சேர்ந்தவரும் நான்கு பிள்ளைகளின் தந்தையுமான சுப்ரமணியம் ரவிக்குமார் (வயது – 43) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேலும், அனர்த்தத்தின் பின்னரான மீட்புப் பணியில் பொலிஸார் மற்றும் மக்கள் ஈடுபட்டதுடன், காயமடைந்த இருவரும் மீட்கப்பட்டு அக்கரப்பத்தனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# சட்டத்தரணிகளின் விருந்தில் கடும் மோதல்; நால்வர் காயம்

கண்டி சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் சட்டத்தரணிகள் கலந்து கொண்ட விருந்தில் ஏற்பட்ட மோதலில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் அனைவரும் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சட்டத்தரணிகளின் உறவினர்கள் இருவருக்கும் ஹோட்டல் ஊழியர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு மோதலாக மாறியுள்ளது.

குறித்த மோதலின் போது ஏற்பட்ட அடிதடியில் நால்வர் காயமடைந்துள்ளனர். அவர்களில் இருவர் ஹோட்டல் ஊழியர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் ஆபத்தான காயங்களுக்குள்ளான இருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஹோட்டலின் உபகரணங்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை சட்டமன்றத் தேர்தல் வாக்களிப்பு தமிழகம் முழுவதும் 88,936 வாக்குச்சாவடிகள்



தமிழக சட்டமன்றத் தேர்தலை யொட்டி மின்னணு வாக்கு இயந்தி ரங்களை வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கும் பணி தொடங் கியுள்ளது. சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக தமிழகம் முழு வதும் 88,936 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப் பதற்காக சென்னையில் இருந்து சொந்த ஊருக்கு 4.22 லட்சம் பேர் பஸ்களில் பயணமாகியுள்ளதாக தரவு கள் வெளியாகியுள்ளன.

கடந்த முதலாம் திகதி முதல் நேற்று வரை 10,500 பஸ்க ளில் இவர்கள் சொந்த ஊர்க ளுக்குப் பயணம் செய்துள் ளனர். தமிழக சட்டமன்றத் தேர் தலை ஒட்டி சிறப்பு பஸ்களை போக்குவரத்துத்துறை ஏற்பாடு செய் துள்ளது. இதே வேளை, சொந்த வாகனங்கள் மற்றும் மாற்றுப் போக் குவரத்து சாதனங்களில் குறித்த தினங்களில் இன்னும் லட்சக்கணக் கானவர்கள் பயணித்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

## வாக்காளர்களுக்கு லஞ்சம்;

# மோடி படத்துடன் தங்கக்காசு விநியோகம்

திருநள்ளாறில் மோடி படத்துடன் வாக் காளர்களுக்கு விநியோகம் செய்த தங்க காசுகளை பறக்கும் படையினர் கைப்பற்றினர். காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு தொகுதி யில் பா.ஜ.க. வேட்பாளராக ராஜசேகரும் காங்கிரஸ் வேட்பாளராக கமலக்கண்ணனும் போட்டியிடுகின்றனர்.

திருநள்ளாறு தொகுதி முழுவதும் வாக்கா ளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்குவதாக தேர்தல் பறக்கும் படையின ருக்கு ரகசிய தகவல் கிடைத்ததையடுத்து பறக் கும் படையினர் திருநள்ளாறு பகுதி முழுவதும் நேற்று காலை அதிரடியாக சோதனையிட்டனர்.

இதன் போது அங்கு தங்கக் காசுகள் வாக் காளர்களுக்கு விநியோகம் செய்யப்படுவது தெரியவந்ததாகவும் பறக்கும் படையினரைக் கண்ட சிலர் கையிலிருந்த தங்க காசுகளை



சாலையில் வீசி விட்டு தப்பி ஓடினர் என்றும் கூறப்படுகிறது. சாலையில் கிடந்த 159 தங்கக் காசுகளை கைப்பற்றிய அதிகாரிகள், இவை தொடர்பாக விசாரணை செய்து வருகின் றனர்.

# மாவோயிஸ்டுகள் தரப்பில் 20 பேர் வரை பலி; மோதல் குறித்து இராணுவ வட்டாரம் தகவல்

சட்டீஸ்கரில் நடந்த தாக்குதலில் மாவோயிஸ்டுகள் தரப்பில் 20 பேர் வரை பலியாகியிருக்கலாம் என இராணுவ வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சட்டீஸ்கர் மாநிலத்தில் தெற்கு பஸ்தார் வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும் நக்சலைட்டுகளுக்குமிடை யில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் இரு தரப்பிலும் பலர் பலியானதாகக் கூறப்பட்டது.

நடைபெற்ற கடுமையான துப்பாக்கிச் சண்டையில் பாதுகாப்புப் படையினர் 22 பேர் உயிரிழந்தனர் என்று இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. அந்த மோதலில் மாவோயிஸ்டுகள் தரப்பிலும் 20 பேர் வரை பலியாகி இருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்களை மாவோயிஸ்டுகள் அடர் வனப்பகுதிக்கு எடுத்துச்சென்று விட்டதால் எண்ணிக்கையை சரியாகக் கணிப்பிட முடியவில்லை என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.



# கொரோனா பரவல் தீவிரம் காஷ்மீரில் இன்று முதல் பாடசாலைகள் இயங்காது

காஷ்மீரில் கொரோனாப் பாதிப்புகள் வேகமாக அதிகரித்து வருவதால் அனைத்து பாடசாலைகளையும் மூட உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் கடந்த சில நாள்களாக தின சரி கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் பாடசாலைகளைச் சிலநாள்களுக்கு மூடுவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

காஷ்மீரில் கொரோனாத் தொற்று வேகமா கப் பரவி வருவதால் பாடசாலைகள் ஏப்ரல் 21 ஆம் திகதி வரை மூடப்படுகிறது என்று ஆளுநர் சின்கா தெரிவித்துள்ளார். இருநூறு பேருக்கு அதிகமாகக் கூடும் சமூக நிகழ் வுகளுக்கும் கூட்டங்களுக்கும் அனுமதி யில்லை என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆளுநர் மனோஜ் சின்காவின் இந்த உத் தரவு இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

# புதுவையை பா.ஜ.க. கைப்பற்றினால் தமிழகத்திற்கு பாதிப்பு - திருமாவளவன்

உழவர்கரை தொகுதியில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியில் விடுதலைச் சிறுத் தைகள் கட்சி சார்பில் தேவபொழிலன் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து நேற்று தொகுதி முழுவதும் திறந்த வாக னத்தில் வீதிவீதியாக சென்று அந்தக் கட்சியின் அமைப்பாளர் தொல்.திருமாவ ளவன் எம்.பி. வாக்குச் சேகரித்தார்.

பிரசாரத்தின்போது தொல்.திருமாவ ளவன் எம்.பி. பேசியபோது, 'புதுவை சட்ட மன்றத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒரு தொகுதியில் போட்டியிடுகிறது. அதற்கு உங்கள் ஆதரவு தேவை. அதற்காக இரண்டாவது முறையாக வாக்குகள் கேட்டு வந்துள்ளேன். தேர்தல் திகதி அறிவிக்கும் முன்பாக காரணம் இல்லாமல் புதுவை யில் காங்கிரஸ் அரசு கவிழ்க்கப்பட்டது.

'எம்.எல்.ஏக்களை விலைபேசி, இராஜி னாமா செய்ய வைத்து அப்போதைய அரசை பா.ஜ.க. கவிழ்த்தது. இந்த ஜனநாயக விரோத செயல்களுக்கு என்.ஆர்.காங்கிரஸ் உடந்தையாக இருந்து ஆதரவு அளித்துள்ளது.

'புதுச்சேரியை கைப்பற்றியே தீருவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல் படுகிறார்கள். கடந்த முறை தமிழக அரசை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டார்கள். ஆனால் புதுவை அரசை



கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடிய வில்லை. இதனால் ஆளுநரை வைத்து திட்டங்களை செய்யவிடாமல் தடுத்தனர். அதற்கு என்.ஆர்.காங்கிரஸும், அ.தி.மு. க.வும் துணைபோயின.

'புதுவையை பா.ஜ.க. கைப்பற்றினால் தமிழகத்துக்கும் பாதிப்பு வரும். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கு இடையே யான ஒற்றுமை பாதிக்கப்படும். அமைதி கெடும். சமூக நல்லிணக்கம் இருக்காது. இடஒதுக்கீடு இருக்காது. எனவே, புதுவை யில் எந்தக் காரணத்தைக் கொண்டும் பா.ஜ.க. ஆட்சி அமைய விட்டுவிடக்கூடாது. காங்கிரஸ் கூட்டணி ஒன்றிணைந்து ஆட்சியைப் பிடிக்க வேண்டும். புதுவையை காக்க பா.ஜ.கவை, பாசிச சக்திகளை இங்கு வேரூன்ற விடக்கூடாது. அதனை எவ்வாறேனும் தடுக்கவேண்டும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம்

ரஷ்ய நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கே லாவ்ரோவ் இந்தி யாவுக்கு 2 நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த சுற்றுப்பய ணத்தில் அவர் மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இதில், இரு நாட்டு வெளிவிவகார அமைப்புகளின் தலைவர்களும் இரு தரப்பு உறவுகளின் நடப்பு நிலை பற்றி ஆலோசனை மேற்கொள்வார்கள். இந்த ஆண்டு நடைபெறவுள்ள உயர் மட்ட அளவிலான கூட்டத்திற்கு தயாரா வது பற்றியும் கொரோனா பெருந் தொற்றுக்கு எதிரான போரில் ஒத்து ழைப்புடன் செயல்படுவது உள்ளிட்டவை யும் இந்த ஆலோசனையில் முக்கிய இடம்பெறும் என்று தகவல்கள் கூறு கின்றன.

இதேபோன்று, பரஸ்பர விருப்பங்க ளுடன் கூடிய மண்டல மற்றும் சர்வதேச அளவிலான விவகாரங்கள் பற்றியும் விவாதிக்கப்படவுள்ளது. ஐ.நா., பிரிக்ஸ் உட்பட சர்வதேச அரங்கில் ரஷ்யா மற் றும் இந்தியாவுக்கிடையிலான பேச்சுக் கான அணுகுமுறைகளைப் பற்றியும் இதன்போது ஆய்வு செய்யப்படும் என மத்திய வெளிவிவகார அமைச்சக



செய்தித் தொடர்பு அதிகாரி அரிந்தம் பக்சி கூறியுள்ளார்.

இந்திய சுற்றுப்பயணம் நிறைவ டைந்த பின்னர் ஏப்ரல் 6 மற்றும் 7 ஆகிய திகதிகளில் பாகிஸ்தான் நாட் டுக்கு லாவ்ரோவ் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரசியல் பேச்சு, வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், இராணுவம் மற்றும் தொழில் நுட்ப உறவுகள், அறிவியல், கலாசாரம் மற்றும் மனிதநேய அடிப்ப டையிலான தொடர்புகள் ஆகியவற்றை இரு நாடுகளும் வளர்த்து வருகின்றன என இந்தியாவில் உள்ள ரஷ்ய தூதரகம் தனது நாட்டு அமைச்சரின் வருகை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

# கொரோனாத் தொற்றால் பெண் உயிரிழப்பு மருத்துவமனைக்கு தீ வைத்த உறவினர்கள்

மராட்டியத்தின் நாக்பூர் நகரில் உள்ள மருத்துவ மனை ஒன்றில் 29 வயதுடைய பெண் ஒருவர் கொரோனா பாதிப்புகளுக்கு சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனால், அந்தப் பெண்ணின் கணவர் மற்றும் அவரது நண்பர்கள் மருத்துவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் உறவினர்களுடன் இணைந்து அந்த மருத்துவமனையின் வரவேற்புப் பகுதியை தீ வைத்துக் கொளுத்தியுள்ளார்.

இதுபற்றி காவல்துறை துணை ஆணையாளர் லோகித், 'இறந்துபோன பெண்ணின் கணவரது உறவினர் களில் ஒருவர் பெற்றோல் வாங்கி வந்துள்ளார். இதன்பின் வரவேற்பறையில் இருந்த மேசை மீது தீ வைத்துள்ளார். உடனடியாக, மருத்துவமனையில் இருந்த ஊழியர்கள் தீயை அணைத்து அது பரவாமல் தடுத்துள்ளனர். சி.சி.டி.வியில் இந்தக் காட்சிகள் பதிவாகியிருந்தன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 11 பேரில் 10 பேரை கைது செய்துள்ளோம்' என கூறியுள்ளார்.

அந்த மருத்துவமனையின் அலட்சியப் போக்கே பெண்ணின் உயிரிழப்புக்கு காரணம் என அவரது உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இறந்தவரது உடலை தராமல் உடலை ஒப்படைப்ப



தாயின் ஒன்றரை லட்சம் பணம் கட்ட வேண்டும்' என்று மருத்துவமனையில் கூறியுள்ளனர் என்றும் இதனால் ஏற்பட்ட கோபத்திலேயே தீ வைப்பு சம்பவம் நடந்துள்ளது எனவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷியாவில் வரலாறு காணாத வெள்ளம் 7 கிராமங்கள் தண்ணீரில் மூழ்கின; 50 பேர் சாவு!

இந்தோனேஷியாவில் நிலச்சரிவு மற்றும் வரலாறு காணாத கன மழையால் 50 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கிழக்கு பிளோர்ஸ் தீவுப் பகுதியில் ஈஸ்டர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு கொண்டு இருந்த மக்களுக்கு பேரதிர்ச்சியாக நகரம் முழுவதையும் வெள்ள நீர் சூழ்ந்தது. கட்டுக்கடங்காமல் சூழ்ந்த வெள்ள நீரால் சுமார் 7 கிராமங்கள் நீரில் மூழ்கி, பாலம் மற்றும் சாலைகள் அடித்து செல்லப்பட்டன.

வீடுகள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கிய நிலையில் அங்கு தற்போது வரை 50 பேர் உயிரிழந்து உள்ளதாகவும், காணாமல் போன 27 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மீட்பு குழு அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.





# மீன்பிடி படகு கவிழ்ந்து சீனாவில் 12 பேர் பலி



சீனாவின் கிழக்கு மாகாணம் ஜெஜியாங்கில் உள்ள நிங்போ ஜுஷான் துறைமுகத்தில் இருந்து 100 கடல் மைல் தொலைவில் கடலில் நேற்றுக் காலை மீன்பிடி படகு ஒன்று மீன் பிடிப்பில் ஈடுபட்டிருந்து.

அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக அந்த படகு திடீரென கடலில் கவிழ்ந்தது. இதில் படகில் இருந்த 20 பேரும் நீரில் மூழ்கினர். இதுகுறித்து தகவல் கிடைத்ததும் சீனக் கடலோர காவல் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் அதற்குள் 12 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களது உடல்களை மீட்புக் குழுவினர் மீட்டனர். அதேசமயம் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த 4 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். மேலும் இந்த விபத்தில் 4 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. அவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

# மியன்மாரில் ஈஸ்டர் முட்டைகள் மூலம் எதிர்ப்பைக் காட்டிய போராட்டக்காரர்கள்



இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த தினமான ஈஸ்டர் பண்டிகை நேற்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. ஈஸ்டர் என்றாலே முதலில் நினைவுக்கு வருவது வண்ணமயமான ஈஸ்டர் முட்டைகள் தான். மேற்கத்திய நாடுகளில் இந்த ஈஸ்டர் முட்டைகள் மிகப்பிரபலம்.

இந்த நிலையில் மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக தினந்தோறும் பல்வேறு வழிமுறைகளில் போராட்டம் நடத்தி வரும் அந்த நாட்டு மக்கள் நேற்று ஈஸ்டர் முட்டை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் ஈஸ்டர் முட்டைகள் மீது ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிரான படங்களை வரைந்து தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

யாங்கூன், மாண்டலே ஆகிய நகரங்களில் போராட்டக்காரர்கள் ஈஸ்டர் முட்டைகளை கையில் ஏந்தி ராணுவ ஆட்சிக்கு எதிரான கண்டன கோஷங்களை எழுப்பியபடி பேரணியாகச் சென்றனர்.

இது ஒருபுறமிருக்க பூக்கள் போராட்டம் என்கிற பெயரில் மற்றொரு போராட்டத்தையும் போராட்டக்காரர்கள் முன்னெடுத்தனர். அதன்படி இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட போராட்டக்காரர்களின் நினைவாக சாலைகளில் பூங்கொத்துகளை வைத்து போராட்டம் நடத்தினர்.

# ஜப்பானில் கொட்டும் மழையிலும் ஒலிம்பிக் தீபத்திற்கு மக்கள் வரவேற்பு



ஜப்பானில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் கிபு மாகாண சாலைகளில் ஒலிம்பிக் தீபம் கொண்டு செல்லப்பட்டது.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டி வரும் ஜுலை மாதம் தொடங்க உள்ளதை முன்னிட்டு ஜப்பான் நகர சாலைகளில் ஒலிம்பிக் தீபம் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கிபு மாகாண சலைகளில் மழை பொழிவுக்கு மத்தியில் ஏராளாமான வீரர், வீராங்கனைகள் தீபத்தை ஊர்வலமாக கொண்டு சென்றனர். இருபுறங்களில் சூழ்ந்த மக்கள் கொடி மற்றும் கைகளை ஆட்டியும், மேளங்கள் அடித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மலை பகுதிகளில் ஒலிம்பிக் தீபம் கொண்டு செல்லப்பட்டு கலை நிகழ்ச்சிகள் வாண வேடிக்கைகள் நடைபெற்றன

# எகிப்தில் பல ஆண்டுகளுக்கு பின் அருங்காட்சியகம் திறப்பு மன்னர்கள், ராணிகளின் மம்மிகள் காட்சிப்படுத்தப்பட்டன

எகிப்தில் பல ஆண்டுகளுக்கு பின் மீண்டும் திறக்கப்பட்ட அருங்காட்சியகத்தில் 18 மன்னர்கள் மற்றும் 4 ராணிகளின் மம்மிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

தலைநகர் கைரோவில் உள்ள 85 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அருங்காட்சியகம் கட்டுமான பணிகள் காரணமாக நீண்ட நாள்கள் மூடப்பட்டது. இந்த நிலையில் நீண்ட நாள்களுக்கு பின் அருங்காட்சியகம் திறக்கப்பட்டு எகிப்தின் தாக்ரிர் சதுக்கத்தை ஆண்ட 18 மன்னர்கள் மட்டும் 4 ராணிகளின் மம்மிகள் உள்பட பல்வேறு புராதான கல்வெட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டன. அருங்காட்சியகத்தை திரளான சுற்றுலாப் பயணிகள் வந்துஆர்வமாகபார்த்து சென்றனர்.



# 'அடிடாஸ்' நிறுவன முன்னாள் உரிமையாளரை கட்டி போட்டு அடி, உதை; திருடர்கள் அட்டூழியம்



பிரான்ஸ் நாட்டின் முன்னாள் மந்திரியாக இருந்தவர் பேர்னாட் தபை. இவரது மனைவி டாமினிக் தபை. அடிடாஸ் நிறுவன முன்னாள் உரிமையாளரான பெர்னார்டு, பாரிஸ் அருகேயுள்ள காம்ஸ் லா வில்லே பகுதியில் அமைந்த தனது வீட்டினுள் நுழைத்த கொள்ளையர்கள் அவரையும் அவரது மனைவியையும் தாக்கிக் கட்டி வைத்து விட்டு பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

தம்பதிகள் உறக்கத்தில் இருந்த சமயம் வீட்டின் உள்ளே நுழைந்த நால்வர் அவர்களைத் தாக்கி கைகளைக் கட்டி அறை ஒன்றினுள் அடைத்து வைத்து விட்டு அங்கிருந்து பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரித்துச் சென்றிருக்கின்றனர்.றொலெக்ஸ் (Rolex) உட்பட பெறுமதி வாய்ந்த கைக்கடிகாரங்கள், வளையல்கள், காதணிகள், மோதிரம் உட்பட பல அணிகலன்கள் களவாடப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

கொள்ளையர்கள் தப்பிச் சென்றதும் ஒருவாறு வெளியே வந்த பேர்னாட் தபையின் மனைவி சம்பவம் குறித்து அயலவரிடம் தகவல் தெரிவித்திருக்கிறார். அயலவர்கள் அழைத்ததை அடுத் துப் பொலிஸார் அங்கு விரைந்து வந்து வயோதிபர்களான தம்பதிகள் இருவரையும் மீட்டுள்ளனர். தாக்கப்பட்டதில் காயமடைந்த தப்பியின் மனைவி பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.கொள்ளை தொடர்பாக எவரும் உடனடியாகக் கைது செய்யப்படவில்லை.

சம்பவத்தையடுத்து அதிபர் மக்ரோன் போர்னாட் தப்பியுடன் தொடர்பு கொண்டு நலம் விசாரித்தார் என்று எலிஸே மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரபல தொழிலதிபரும் மூத்த அரசியல் வாதியுமான 78 வயதுடைய பேர்னாட் தப்பி சோசலிசக் கட்சியில் அரசியல் பதவிகளை வகித்தவர். பிரான்ஷ்வா மித்ரோனின் ஆட்சியில் நகர அபிவிருத்தி அமைச்சராக விளங்கியவர். ஊழல் முறைகேடுகள் காரணமாகத் தனது அமைச்சுப் பதவியை இழந்தவர். பாடகர், நடிகர் என்று பல துறைகளில் பிரபலமாக அறியப்பட்ட அவர் தற்சமயம் புற்றுநோயினால் அவதிப்பட்டுவருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆவது தடவையாக ஆரம்பித்தது இளைஞர்களின் பெரும் போராட்டம்

அம்பாறை, ஏப். 05

சம்மாந்துறையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போ வேறு இடத்திற்கு மாற்றப்பட உள்ளதாக வெளியான தகவலையடுத்து அதுதொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த டிப்போவை அவ்விடத்திலேயே நிரந்தரமாக இருக்கச் செய்ய பல கட்ட நடவடிக்கைகள் பலதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அவை வெற்றியளிக்காமையால் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போவை அங்கையே நிரந்தரமாக வைக்குமாறு கோரி சம்மாந்துறை இளைஞர்கள் இன்று திங்கட்கிழமை (5) அந்த சாலைக்கு அண்மையில் திரண்டு சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் டாக்டர் ஐ.எல்.ஏ. மஜீத், உட்பட இளைஞர்கள் பலரும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது, இந்த போராட்டம் வெற்றியளிக்காவிட்டால் சாலைமறியல் போராட்டம் நடத்த உள்ளதாவும், அரசியல்வாதிகள் பலரும் தீர்வுகளை பெற்றுத்தருவதாக எங்களை ஏமாற்றுவதாகவும் அதனால் அவர்களை நம்பாது தொடர்ந்தும் தீர்வு கிட்டும்வரை அவ்விடத்திலேயே போராட்டத்தை தொடர உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அரச உயர்மட்டம்முதல்குறித்தஇலாக்காவுக்கு பொறுப்பான அமைச்சர்கள் வரை பேசியிருந்தும் இவ்விடயம் வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## மீண்டும் ஓர் இருண்ட யுகத்திற்குள் செல்கின்றோமா நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி



மக்கள் செறிந்து வாழும் தம்பட்டையில் அதிரடிப்படை முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. மீண்டும் ஓர் இருண்ட யுகத்திற்குள் செல்கின்றோமா? அபிவிருத்தி என்ற போர்வையில் எமது பல பிரதேசங்களின் வளங்கள் அபரிக்கப்படுகின்றன. என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பியுள்ளார்..

எமது வடக்கு கிழக்கு மக்களை ஏமாற்றி கடந்த காலத்திலே வாக்குகள் பெற்றெடுத்த ஆளுந்தரப்பு அரசியற் பிரமுகர்கள் யாரும் இவை தொடர்பில் குரல் கொடுத்ததாகத் தெரியவில்லை. இது தானா ஆளுந்தரப்பு தமிழ் அரசியல் வாதிகளின் அபிவிருத்தி?

அம்பாறை மாவட்டத்திலும் இல்மனைட் பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் அபிவிருத்தி என்ற விடயங்களை நம்மவர்களும் மேற்கொண்டார்கள். ஆனால் அவர்கள் விளம்பரப்படுத்தவில்லை. ஆனால் நாங்கள் செய்யத்தவறிய ஒரே ஒரு விடயத்தை மாத்திரம் விளம்பரப்படுத்தி கடந்த தேர்தலில் எங்களுடைய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு ஒரு தனிநபரின் செயற்பாடு காரணமாக இருந்தது.

எங்களுக்குள்ளேயே சிலரை வைத்து பிரச்சினைகளை வளர்த்து விட்டு அதில் தாங்கள் பலனடைவதற்குப் பலர் முயற்சிக்கின்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அட்டாளைச்சேனையில் சிரமதானத்துக்கு அழைப்பு

அட்டாளைச்சேனை அல் – இபாதா கலாசார மன்றம் புனித ரம்ழான் மாதங்களில் ஹதீஸ் மஜ்லிஸ் பயான் நிகழ்வுகளை கடந்த பத்து வருடங்களாக நடாத்தி வருகின்றது. அந்த வகையில் இம்முறையும் நடைபெறவிருக்கின்ற ஹதீஸ் மஜ்லிஸ் நிகழ்வுகளின் முதற்கட்டமாக மாபெரும் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.சி.ஏ. சாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அல் – இபாதா கலாசார மன்றத்தின் போசகரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை கலந்து கொண்டார். நிகழ்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி எதிர்வரும் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கோணாவத்தை பாதையின் இரு மருங்குகளும் சுத்தம் செய்யப்பட இருக்கின்ற சிரமதானப் பணியில், பிரதேசத்தின் இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், பள்ளிவாசல் சம்மேளனம், பாடசாலைகள், சமூக நிறுவனத்தினர் என அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## உரிமையாளர் இல்லாத இரும்பு பெட்டி மீட்பு



திருகோணமலை மத்திய பஸ் நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் உரிமைகோரப்படாத இரும்புப் பெட்டி ஒன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதால் இன்று காலை முதல் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது

திருகோணமலை மத்திய பஸ் நிலையத்தின் மூதூர் மற்றும் கிண்ணியா ஆகிய பகுதிகளுக்கான பஸ்கள் தரித்து நிற்கும் இடத்திற்கு அருகாமையில் இன்று காலை முதல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது

விசேட அதிரடிப்படையினரது குண்டு செயலிழக்கும் அணியினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பலத்த பாதுகாப்புடன் குறித்த பெட்டியை திறந்து போது அது ஒரு இராணுவ சிப்பாயினுடையது என அடையாளம் காணப்பட்டது.

## இனமத முரண்பாடுகளை கலையால் களையவேண்டும்

**கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தெரிவிப்பு**

இந்தியாவில் 132 கோடிக்குமேல் பல்லின பல்மொழி பல்கலாசார இனக்குழுமங்களிலிருந்தும் அந்த நாடு ஒற்றுமையாக இருப்பதற்குக் காரணம் கலைகள். அந்தக்கலைகள் தான் அவர்களை ஒன்றாக கட்டிப்போட்டிருக்கின்றன. அதேபோல இலங்கையிலுள்ள இனமத முரண்பாடுகளை கலைகளைக்கொண்டுதான் களையவேண்டும்.

இவ்வாறு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த குறும்படத்தயாரிப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தும் பொருட்டு இரண்டுநாள் பயிலரங்கின் இறுதி நாளான வியாழக்கிழமை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் முதலாவது பயிலரங்கு காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் கடந்த கடந்த வாரம் பணிப்பாளர் சரா.நவநீதன் தலைமையில் நடைபெற்றது.

வளவாளர்களாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பொறியியலாளர் கௌரிபாலன், பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன், தென்இந்திய சினிமா தயாரிப்பாளரான வெற்றி மாறனின் உதவி தயாரிப்பாளர் ஆடுகளம் திரைப்பட புகழ் ஹஸீன், குறும்பட தயாரிப்பாளர் ஜானதாஸ் காசிநாதர், ஆறாம் நிலம் படத் தயாரிப்பாளர் ஈழத்தின் முக்கிய திரைக்கலைஞர் ஆனந்த ரமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முச்சக்கரவண்டி விபத்து



திருகோணமலை - கண்டி வீதி, 4 ஆம் கட்டைப் பகுதியில், திருகோணமலையில் இருந்து மாத்தளை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்து நேற்று விபத்துக்குள்ளானது.

இதில் 2 சிறுவர்களோடு, தாயும் தகப்பனும் பயணித்ததாகவும் தகப்பனும் ஒரு பிள்ளையும் படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், மாத்தளை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்த சீனக்குடா பொலிஸார், விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்பொருள் வியாபாரம் இரண்டு இளம் பெண்கள் கைது

*போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் இரு பெண்களை நேற்று பிறைந்துரைச்சேனை பகுதியில் வைத்து பிடித்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து புலனாய்வுப்பிரிவினரும் வாழைச்சேனைப் பொலிஸாரும் சிறுவர் மகளிர் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியின் உதவியுடன் இரு பெண்களையும் பிறைந்துறைச்சேனை பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.*

*கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து 500 மில்லி கிராம் ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள், 60 போதை மாத்திரைகளும் அடுத்த பெண்ணிடமிருந்து ஹெரோயின், 25 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் இவர்களுடன் தொடர்புபட்டோர் கொள்வனவு செய்தோர் தொடர்பிலும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.*

*அத்துடன் இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் பல தகவல்கள் வெளிவந்துள்ளதுடன், சம்பந்தப்பட்டோரைக் கைது செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட இரு பெண்களும் 36 மற்றும் 45 வயதுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மியாமி ஓபின் டென்னிஸ்: ஆஸ்திரேலிய வீராங்கனை ஆஷ் பார்ட்டி மீண்டும் 'சம்பியன்'





மியாமி ஓபின் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் வென்று ஆஸ்திரேலிய வீராங்கனை ஆஷ் பார்ட்டி மீண்டும் சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

மியாமி ஓபின் சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனும், 'முதல் நிலை' வீராங்கனையுமான ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்ட்டியும், 9 ஆம் நிலை வீராங்கனையான கனடாவின் பியான்கா அன்ட்ரீஸ்குவும் மோதினர்.

முதல் 3 கேம்களை பார்ட்டி வெல்ல அடுத்த 2 கேம்களை பியான்கா வசப்படுத்தினார். ஆனால் அதன் பிறகு ஆஷ்பார்ட்டியின்ஆக்ரோஷமானஷொட்களுக்கும், சக்திவாய்ந்த சர்வீஸ்களுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் பியான்கா திணறினார். தொடர்ச்சியாக கேம்களை தனதாக்கி முதல் செட்டை 6 - 3 என்ற கணக்கில் கைப்பற்றிய ஆஷ் பார்ட்டி 2 ஆவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்தினார்.

2 ஆவது செட்டில் பியான்கா மைதானத்தில் தவறி விழுந்தார். இதில் அவரது வலது கால் வேகமாக மடங்கியதில் கணுக்காலில் காயம் ஏற்பட்டது. வலியால் அவதிப்பட்ட அவர் காயத்துக்கு சிகிச்சை எடுத்துக் கொண்டு ஆடினார். ஆனாலும் அவரால் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை. 2 ஆவது செட்டில் பியான்கா 0 - 4 என்ற கணக்கில் பின்தங்கி இருந்த போது கண்ணீர் மல்க போட்டியை விட்டு விலகினார். இதையடுத்து ஆஷ்லே பார்ட்டி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவர் பட்டத்தையும் தக்க வைத்துக் கொண்டார்.

35 ஆண்டு கால மியாமி ஓபின் டென்னிஸ் வரலாற்றில் அடுத்தடுத்துப் பட்டத்தை வென்ற 6 ஆவது வீராங்கனை என்ற சிறப்பை ஆஷ்லே பார்ட்டி பெற்றார். இதற்கு முன்பு ஜேர்மனியின் ஸ்டெபி கிராப், அமெரிக்காவின் மோனிகா செலஸ், வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள், ஸ்பெயினின் சாஞ்சஸ் விகாரியா ஆகியோர் தொடர்ச்சியாக இரண்டு முறை பட்டம் வென்றவர்கள் ஆவர்.

போட்டியின் முடிவில் ஆஷ் பார்ட்டி கூறுகையில், 'இறுதிப்போட்டி இந்த மாதிரி முடிவதை நான் ஒரு போதும் விரும்புவதில்லை. பியான்காவுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். மியாமி பட்டத்தைத் தக்க வைத்துக்கொண்ட ஜாம்பவான்கள் வரிசையில் நானும் இடம் பிடித்திருப்பதை கௌரவமாகக் கருதுகிறேன். தரவரிசையில் எனது முதலிடம் குறித்து நிறைய விவாதிக்கப்படுவதை அறிவேன். ஆனால் கடந்த ஆண்டில் நான் எல்லாப் போட்டிகளிலும் விளையாடவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் எனது புள்ளிகளிலும் முன்னேற்றம் காண முடியவில்லை. அதே சமயம் புள்ளிகளை இழக்கவுமில்லை. என்னைப் பொறுத்தவரை நான் முதல் இடத்துக்கு தகுதியானவள்தான்'என்றார்.

2019 ஆம் ஆண்டு அமெரிக்க ஓபின் பட்டத்தை வென்றவரான 20 வயதான பியான்கா அதன் பிறகு கால் காயத்தால் பல போட்டிகளைத் தவறவிட்டார். இப்போது அவர் மீண்டும் காயத்தில் சிக்கியிருக்கிறார். அவர் கூறுகையில், 'கடினமான கட்டத்தில் இருந்து மீண்டு வந்து இந்த அளவுக்கு விளையாடியதை நினைத்துபெருமிதம்கொள்கிறேன். இறுதிப்போட்டியில் பாதியில் விலகுவதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் இது மாதிரி நடப்பது சகஜம். எனது டென்னிஸ் வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வதை எதிர்நோக்குகிறேன். எனது வயது வெறும் 20 தான். அதனால் இப்போதைக்கு எந்த அநாவசிய முடிவுகளையும் எடுக்க முயற்சிக்கமாட்டேன்' - என்றார்.

# பாகிஸ்தான் அணி தோல்வி; ஆனால் துடுப்பாட்டத்தில் சமான் சாதனை!



பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 1 – 1 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா சமநிலை செய்துள்ளது.

ஜோகனஸ்பர்க் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்றபாகிஸ்தான் அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 341 ஓட்டங்களைக் குவித்தது. பவுமா 92 ஓட்டங்களையும் டி கொக் 80 ஓட்டங்களையும் வென்டர் டஸென் 60 ஓட்டங்களையும் மில்லர் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பாகிஸ்தான் அணியின் ஹரிஸ் ரவூப் 3 விக்கெட்டுக்களையும், ஷாயின் அப்ரிடி, மொஹமட் ஹஸ்னைன் மற்றும் பஹீம் அஸ்ரப் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 342 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணியால் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 324 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனால் தென்னாபிரிக்க அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பஃகர் சமான் 193 ஓட்டங்களையும் பாபர் அசாம் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். தென்னாபிரிக்க அணியின் என்ரிச் நோட்ஜே 3 விக்கெட்டுகளையும் அன்டில் பெலுக்வாயோ 2 விக்கெட்டுக்களையும் ரபாடா, இங்கிடி மற்றும் சம்ஸிஆகியோர்தலா1விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக 155 பந்துகளில் 10 சிக்ஸர்கள் 18 பவுண்டரிகள் அடங்கலாக 193 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட பஃகர் சமான் தெரிவுசெய்யப்பட்டார்.

பஃகர் சமானின் இந்த 193 ஓட்டங்கள் என்பது, ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட்டில் இரண்டாவது இன்னிங்ஸ்சுக்கான துடுப்பாட்டத்தின் அதிகபட்ச தனிநபர் ஓட்ட எண்ணிக்கையாக பதிவாகியுள்ளது.

இந்தப் பட்டியலில் அவுஸ்ரேலியாவின் ஷேன் வொட்சன் 185 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலும் டோனி மற்றும் கோலி இருவரும் 183 ஓட்டங்களுடன் மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களிலும் உள்ளனர்.

பஃகர் சமான் 193 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதன் மூலம் வெற்றி இலக்கைத் துரத்தி தோல்வியைத் தழுவிய அணியில் தனியொரு வீரரின் இரண்டாவது அதிகபட்ச ஓட்டம் என்ற சாதனையைப் பதிவுசெய்தார். பங்களாதேஷ் அணிக்கெதிராக சிம்பாப்வே வீரர் சார்லஸ் கோவன்ட்ரி 194 ஓட்டங்களை எடுத்ததே சாதனையாக உள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நாளை மறுதினம் செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது.


# டோக்கியோ ஒலிம்பிக் இந்திய துப்பாக்கி சுடுதல் அணி தமிழக வீராங்கனை இளவேனில் வாலறிவன் தெரிவானார்



2020 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜூலை 23 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட இந்திய துப்பாக்கி சுடுதல் அணியை தெரிவு செய்து தேசிய துப்பாக்கி சுடுதல் சங்கம் அறிவித்துள்ளது. இதில் உலகின் 'முதல் நிலை' வீராங்கனையான கடலூரைச் சேர்ந்த இளவேனில் வாலறிவன் இடம் பிடித்துள்ளார்.

21 வயதான இளவேனில் தகுதிச் சுற்றுப்போட்டிகளின் மூலம் ஒலிம்பிக் இடத்தைப் பெறாவிட்டாலும் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அவருக்கு அணியில் இடம் வழுங்கப்பட்டுள்ளது. அதே சமயம் ஒலிம்பிக் கோட்டாவை வென்று தந்தவரும் சமீபத்தில் டெல்லியில் நடந்த உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதலில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றிய வீராங்கனையுமான சிங்கி யாதவுக்கு மேலதிக வீரர்கள் வரிசையில் இடம் வழங்கப்பட்டுள்ளது. இது கொரோனாக் காலம் என்பதால் ஒவ்வொரு பிரிவிலும் தலா 2 மாற்று மேலதிக வீரர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

# இந்தியாவின் முதல் பெண் கிரிக்கெட் வர்ணனையாளர் காலமானார்





இந்தியாவின் முதல் பெண் கிரிக்கெட் வர்ணனையாளரான சந்திரா நாயுடு தனது 88 ஆவது வயதில் உடல்நலக் குறைவால் காலமானார். சர்வதேசக் கிரிக்கெட்டில் இந்தியாவை முக்கியத்துவம் பெறச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்க கிரிக்கெட் வீரர் சி.கே. நாயுடு. இவரது இளைய மகள்தான் சந்திரா நாயுடு.

இந்தியாவின் முதல் பெண் கிரிக்கெட் வர்ணனையாளரான இவர், கடந்த சில காலமாக உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்த நிலையில், மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரில் அவர் நேற்று மதியம் காலமானார். இதனை அவரது சகோதரியின் மகன் விஜய் நாயுடு உறுதி செய்துள்ளார்.

இந்தூரில்உள்ள அரசுக்கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக பணியாற்றிய அனுபவம் வாய்ந்த சந்திரா, ஹோல்கர் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கிரிக்கெட் விளையாடியுள்ளார். கிரிக்கெட் விளையாட்டில் கொண்ட ஆர்வத்தினால் பின்னாளில் சர்வதேச போட்டிக்கான இந்தியாவின் முதல் பெண் வர்ணனையாளரானார் அவர்.

இவர் கடந்த சில ஆண்டுகளாக பி.சி.சி.ஐ., சி.சி.ஐ. மற்றும் மத்திய பிரதேச கிரிக்கெட் கூட்டமைப்பின் பல்வேறு விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்து வந்துள்ளார். அவரது மறைவுக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் மத்திய பிரதேச கிரிக்கெட் கூட்டமைப்பு தலைவர் சஞ்சய் ஜக்டேல் போன்றோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாட்டில் இரு சட்டங்களை தோற்றுவிக்கும் அபாயத்தில் கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவிற்கான சட்டமூலம்

கொழும்பு, ஏப். 05

கொழும்புத் துறைமுக நகரத்தின் பொருளாதார ஆணைக்குழுவின் அதிகாரங்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள புதிய சட்ட மூலம் ஒரே நாட்டில் இரு சட்டங்களை தோற்றுவிக்கும் அபாயமுடையதாகும்.

எனவே இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீள் அவதானம் செலுத்த வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கொழும்புத் துறைமுக நகரத்தின் பொருளாதாரஆணைக்குழுதொடர்பான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான புதிய சட்டமூலம் வர்த்தமானிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கலந்துரையாடல் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இது தொடர்பில் மதத் தலைவர்கள் உள்ளிட்ட சகல பிரஜைகளும் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த சட்டமூலத்தில் ஒரே நாடு , ஒரே சட்டம் என்பதற்கு பதிலாக ஒரே நாட்டில் இரு சட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாட்டின் அரசமைப்பிற்கு அப்பால் மிகப் பாரதூரமான சட்டமூலமாக இது காணப்படுகிறது.

இந்த சட்ட மூலத்தில் சட்டத்துறைசார் தொழிலுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வழமையான நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சட்டத்தரணிகளுக்கு காணப்படும் வரப்பிரசாதங்கள் துறைமுக நகரத்துடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளில் வழங்கப்படவில்லை.

அதற்கமைய கொழும்பு துறைமுக நகரத்திற்குள் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள்ஏனையபிரதேசங்களில் பின்பற்றப்படும்சட்டநடவடிக்கைகளுடன் தொடர்புடையவையல்ல.

நாட்டுக்கு பொதுவான சட்ட கட்டமைப்பிற்கு அப்பாற் சென்று தனித்து இயங்குவதற்கான அதிகாரம் குறித்த சட்ட மூலத்தின் மூலம் இந்த ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெறும்.

இதனை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. இதே நிலைமை தொடருமாயின் ஒரே நாட்டுக்குள் இரு சட்டங்கள் உருவாகுமாயின் ஒரே நாட்டுக்குள் இரு நாடுகள் உருவாகக் கூடும். சீனா - ஹொங்கொங் , அல்லது சீனா - மெகாவ் போன்ற நிலைமை இலங்கையில் உருவாகக் கூடும்.

துறைமுக அபிவிருத்திக்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. எனினும் இதன் மூலம் நாட்டுக்கு நெருக்கடி ஏற்படுமாயின் அவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. எனவே இந்த சட்ட மூலத்தை நிறைவேற்ற முன்னர் அதில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

இந்தச் சட்டத்தின் மூலம் துறைமுக நகரத்திற்குள் சூது விளையாட்டை ஆரம்பிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதனுடன் விபச்சாரமும் அதிகரிப்பதையும் தடுக்க முடியாமல்போகும்.

உலகில் பல நாடுகளிலும் இதுவே இடம்பெறுகிறது. எனவே இந்த சட்ட மூலம் தொடர்பில் மீள ஆராயுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம். காரணம் இந்த சட்டமூலம் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒத்த தொன்றாகும். - என்றார்.

## இன்று முதல் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கின்றது சூரியன்

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில்பிரதானமாகசீரானவானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சூரியனின் வடதிசை நோக்கிய இயக்கத்தின் கார ணமாக இந்த வருடம் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியிலிருந்து (இன்றிலிருந்து) 14 ஆம் திகதி வரை இலங்கைக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது.

அதன்படி இன்று தெல்வத்தை, பத்தேகம, தெதியவல, முலதியன, அங்குனகொலபெலஸ்ஸ மற்றும் உடமலல ஆகிய பிரதேசங்களுக்கு மேலாக நண்பகல் 12.13 மணி அளவில் சூரியன் உச்சம் கொடுத்தது.

காற்று :

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்று வடமேற்கு முதல் தென்மேற்கு வரையானதிசைகளிலிருந்துவீசக்கூடும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில்காற்றுதென்கிழக்கு முதல் வடகிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 30 - 40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடல் நிலை:

கொழும்பிலிருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

## கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதில் கம்பஹா மாவட்ட மக்கள் அசண்டை

### சுதர்ஷினி விசனம்



கம்பஹா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொரோனா வைரஸுக்கு எதிரான அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை செலுத்திக்கொள்ள பங்கேற்கின்றமை மிகக் குறைவு என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்பூசி நடவடிக்கையின் முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்வதற்காக கம்பஹா மாவட்டத்துக்குச் சென்ற நிலையில், மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

மாவட்டத்தில் இதுவரை 2 லட்சத்து 49 ஆயிரத்து 223 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும் இதில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் 40 வீதம் மட்டுமே அடங்குகின்றனர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

## மோட்டார் சைக்கிளில் சென்றோரை மோதித்தள்ளிவிட்டு தப்பிய ஓட்டோ

### வவுனியாவில் சம்பவம்



வவுனியா, குருமன்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை ஓட்டோ மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் கடும் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதுடன், ஓட்டோவின் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

விபத்து சம்பவித்ததும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தூக்கி வீசப்பட்ட நிலையில் அங்கிருந்தவர்களால் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய ஓட்டோச் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கித்துல்கல பகுதியில் விபத்து; 22 வயதுடைய இளைஞர் பலி!





கித்துல்கல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கித்துல்கல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் களுகொவுத்தென் கம்பி பாலத்திற்கு அருகில் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) காலை இந்த விபத்து இடம்பெற்றது.

டயகம பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற மோட்டர் சைக்கிளும் எட்டியாந்தோட்டை பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி சம்பவ இடத்திலே பலியானார்.

மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவேவாகனவிபத்துநேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் கனரக வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ளதாக கித்துல்கல பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் டயகம முதலாம் பிரிவைச் சேர்ந்த அதிர்ஷ்டநாதன் கோபிநாதன் (வயது – 22) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கித்துல்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org